Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 31.05.2025

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி 31.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

லோக் மாதா தேவி அகில்யா பாயின் 300-ஆவது பிறந்த நாளையொட்டி போபாலில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றினார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, சண்டிகர் நிர்வாகி குலாப் சந்த் கட்டாரியாவுடன் இணைந்து இன்று மாலை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான வீரர்களை பாராட்டுகிறார்.

இளைஞர் விவாகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை, மருத்துவத்துறையுடன் இணைந்து நாளை ஜன் அவுஷதி கேந்திரா கற்றல் திட்டத்தை தொடங்கவுள்ளது.

புதுச்சேரி போக்குவரத்து துறை சார்பில் கல்வி நிறுவனங்களின் பேருந்து வாகனங்களின் சிறப்பு ஆய்வு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தலைமையில் இன்று தொடங்கியது.

*மோடி 1 (19)*

மத்திய பிரதேச மாநிலம், போபாலிலுள்ள ஜம்பூரி மைதானத்தில் இன்று நடைபெற்ற லோக் மாதா தேவி அகில்யா பாயின் 300-ஆவது பிறந்த நாளையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் அதிகாரமளிப்பு மகா

சம்மேளனத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்து கொண்டு உரையாற்றினார். இந்தியாவின் துணிச்சலின் அடையாளமாக ஆப்ரேஷன் சிந்தூர் மாறியுள்ளது என்று அவர் அக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார். பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் பெண் சக்திக்கு ஒரு சவால் என்றும் அது குற்றவாளிகளுக்கு உயிர் பயத்தைக் காட்டியது என்றும் பிரதமர் கூறினார். போபாலில் நடைபெற்ற பொதுப் பேரணியில் உரையாற்றிய அவர், இந்தியா எந்தவிதமான மறைமுகப் போரை பொறுத்துக்கொள்ளாது என்றும், இது போன்ற பயங்கரவாத செயல்களுக்கு உறுதியான பதிலடி கொடுக்க தீர்மானித்துள்ளதாகவும் கூறினார். நமது ராணுவம் நூற்றுக்கணக்கான மைல் தொலைவில், எதிரியின் மறைவிடத்திற்குள் நுழைந்து அவற்றை அழித்தது. ஆப்ரேஷன் சிந்தூர் இந்திய வரலாற்றில் மிகப்பெரிய வெற்றிகரமான நடவடிக்கை என்றும், எந்த வகையில் பயங்கரவாதிகள் நாட்டுக்குள் நுழைந்தாலும் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும், மேலும் அவர்களுக்கு உதவுபவர்கள் அதற்கான விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

*மோடி 2 (13)*

அரசாங்கத்தின் மக்கள் நலத் திட்டங்கள் பற்றி உரையாற்றிய பிரதமர், லோக் மாதா தேவி அகில்யா பாய் ஹோல்கரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்தார். அரசாங்கம் தனது நிர்வாகத்தில் அவரது நகரிக் தேவோ பவ என்ற மந்திரத்தை பின்பற்றி வருவதாகவும், பெண்களின் தலைமையிலான வளர்ச்சியை தேசிய முன்னேற்றத்தின் அடித்தளமாக மாற்றியுள்ளதாகவும், ஒவ்வொரு பெரிய அரசாங்க முயற்சியிலும், பெண்கள் மையமாக உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். பிரதமர் தனது உரையில் நவீன தொழில்நுட்பத்தில் இருந்து பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த காலத்தை விட்டு இந்தியா நகர்ந்தது என்றும், இன்று விவசாய தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பெண்கள் முன்னணியில் உள்ளனர் என்றும், நமோ

ட்ரோன் தீதி பிரச்சாரம் போன்ற முயற்சிகள் அவர்களின் மன உறுதியையும், வருமானத்தையும் அதிகரிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

*பரம் வீர் சக்ரா (8)*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், ஐ.நா பாதுகாப்புப் படையின் ஒருபகுதியாக, இந்தியாவில் இருந்து காங்கோ சென்ற படைக் குழுவில் இடம்பெற்று, 1961ஆம் ஆண்டு காங்கோவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் போன்ற நிலவரத்தில் உயிர்த் தியாகம் செய்து, பரம் வீர் சக்ரா விருது பெற்ற, கேப்டன் குர்பச்சன் சிங் சலாரியா குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

*மன்சுக் மாண்டவியா (13)*

மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, சண்டிகர் நிர்வாகி குலாப் சந்த் கட்டாரியாவுடன் இணைந்து இன்று மாலை சண்டிகரைச் சேர்ந்த சர்வதேச மற்றும் தேசிய அளவிலான வீரர்களை பாராட்டுகிறார். செக்டார் 42ல் உள்ள பெண்கள் முதுகலை கல்லூரியில் நடைபெறும் விழாவில் 8 சர்வதேச மற்றும் 479 தேசிய அளவிலான வீராங்கனைகள் கௌரவிக்கப்பட உள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட வீரர்கள் வில்வித்தை, தடகளம், பூப்பந்து, பேஸ்பால், கூடைப்பந்து, குத்துச்சண்டை, சைக்கிள் ஓட்டுதல் உள்ளிட்ட 28 விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்கினர். 5.67 கோடி ரூபாய்க்கு மேல் ரொக்கப் பரிசுகளும், 1.32 கோடி ரூபாய் மதிப்புள்ள உதவித் தொகைகளும் வழங்கப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியின் போது மத்திய அமைச்சர், ஒரு

பில்லியட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் அரங்கத்தையும், சதுரங்க மையத்தையும் திறந்து வைப்பார்.

*ஜெய்சங்கர் (11)*

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு நியூசிலாந்தின் துணை பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான திரு. வின்ஸ்டன் பீட்டர்ஸ் மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் இந்திய மக்களுடன் நியூசிலாந்து உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவிற்கு வருகை புரிந்த திரு. பீட்டர்ஸ், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் இருதரப்பு கலந்துரையாடலை நடத்தினார். வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், பாதுகாப்பு, பாரம்பரிய மருத்துவம், விளையாட்டு, கல்வி மற்றும் பரஸ்பர உறவு உள்ளிட்டவை குறித்து விவாதங்கள் நடைபெற்றது. சுதந்திரமான, திறந்த, பாதுகாப்பான மற்றும் வளமான இந்தோ பசிபிக் பகுதிக்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டை அவர்கள் வெளிப்படுத்தினர்.

*ஜன் அவுஷதி (12)*

இளைஞர் விவாகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை, மருத்துவத்துறையுடன் இணைந்து நாளை ஜன் அவுஷதி கேந்திரா கற்றல் திட்டத்தை தொடங்கவுள்ளது. இந்த 15 நாள் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதுதும் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 மக்கள் மருந்தகங்களில் 5 இளைஞர் தன்னார்வலர்கள் பணியமர்த்தப்படுவார்கள். தினசரி செயல்பாடுகளுக்கு உதவுதல், சரக்கு மற்றும் மருந்து மேலாண்மையை ஆதரித்தல் மற்றும் பொது மருந்துகள், சுகாதார கல்வியறிவு பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல் உள்ளிட்ட பல்வேறு செயல்களில் தன்னார்வலர்கள் ஈடுபடுவார்கள். இத்திட்டம், நேரடி கற்றலை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், சேவை, ஒழுக்கம், மற்றும் சமூகம் சார்ந்த தொழில்முறை ஆகியவற்றின் மதிப்புகளை வளர்க்கும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி – பேருந்து ஆய்வு (12)*

புதுச்சேரி போக்குவரத்து துறை சார்பில் 900 கல்வி நிறுவனங்களின் ஆயிரத்து 100 மாணவ பேருந்து வாகனங்களில் சிறப்பு ஆய்வு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் மற்றும் போக்குவரத்து ஆணையர் திரு. சிவகுமார் தலைமையில் மேட்டுப்பாளையம் சரக்கு ஊர்தி முனையத்தில் இன்று தொடங்கியது. நாளை வரை நடைபெறும் இந்த சிறப்பு முகாமில் ஆய்வு செய்யப்பட்டதற்கு அடையாளமாக வாகனங்களில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டன. இதற்கென போக்குவரத்து துறையில் வாகன ஆய்வாளர்கள், உதவி வாகன ஆய்வாளர்கள் தலைமையில் 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு தீயணைப்பு துறையின் மூலமாக தீயைக் கட்டுப்படுத்தும் கருவியை பயன்படுத்தும் செயல்முறை விளக்கத்தை இம்முகாமில் காண்பிக்கப்பட்டது. இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் கூறுகையில் …..

…. வாய்ஸ்….

*புதுச்சேரி (12)*

புதுச்சேரி அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பள்ளிக்கல்வித் துறை, தேசிய வாய் சுகாதாரத் திட்டம், இணைந்து நடத்தும் உலக புகையிலை ஒழிப்பு தின விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி இன்று மாலை 6 மணி முதல் 9 மணி வரை கடற்கரைச் சாலை காந்தி திடலில் நடைபெறுகிறது. புகையிலை மற்றும் போதைப் பொருட்களின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புகையிலை இல்லா வாழ்வை ஊக்குவிக்கவும், நோக்கமாகக் கொண்டு இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியின் கருப்பொருள் **புகையிலையின் கவர்ச்சியான முகமூடியை வெளிப்படுத்துதல்-புகையிலை மற்றும் நிகோட்டின் பொருட்கள் மீதான புகையிலை நிறுவனங்களின் கவர்ச்சியான முகமூடியை அம்பலப்படுத்துதல்** ஆகும்.

*வானிலை (5)*

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக நாளை முதல் வரும் ஜூன் 6ஆம் தேதி வரை அடுத்த ஆறு நாட்களுக்கு தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

லோக் மாதா தேவி அகில்யா பாயின் 300-ஆவது பிறந்த நாளையொட்டி போபாலில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றினார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, சண்டிகர் நிர்வாகி குலாப் சந்த் கட்டாரியாவுடன் இணைந்து இன்று மாலை சர்வதேச மற்றும் தேசிய அளவிலான வீரர்களை பாராட்டுகிறார்.

இளைஞர் விவாகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை, மருத்துவத்துறையுடன் இணைந்து நாளை ஜன் அவுஷதி கேந்திரா கற்றல் திட்டத்தை தொடங்கவுள்ளது.

புதுச்சேரி போக்குவரத்து துறை சார்பில் கல்வி நிறுவனங்களின் பேருந்து வாகனங்களின் சிறப்பு ஆய்வு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தலைமையில் இன்று தொடங்கியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது NV/CN/VM